ஸ்ரீ காமகோடி க்ரந்தாவளி :—38

ஸ்ரீ

ஸ்ரீ அப்பய தீக்ஷிதர் அவர்கள் அருளிய

துர்காசந்திரகலா ஸ்துதி

॥ दुर्गाचन्द्रकलास्तुतिः ॥

ம. ராமநாத தீக்ஷிதர்
அவர்கள் இயற்றிய உரையுடனும்
ஸ்ரீ காஞ்சி காமகோடி பீடாதிபதி ஸ்ரீ ஜகத்குரு
ஸ்ரீ சங்கராசார்ய ஸ்வாமிகள் அவர்கள்
ஸ்ரீ முகத்துடனும் கூடியது

முதல் பதிப்பு

ஸ்ரீ காமகோடி கோசஸ்தானம்
4, பிரான்ஸிஸ் ஜோஸப்புத் தெரு, சென்னை

பதிப்புரிமை] 1952 [விலை அணா 5

ஸ்ரீ காமகோடி க்ரந்தாவளி :—38

ஸ்ரீ

ஸ்ரீ அப்பய தீக்ஷிதர் அவர்கள் அருளிய

துர்காசந்திரகலா ஸ்துதி

॥ दुर्गाचन्द्रकलास्तुतिः ॥

ம. ராமநாத தீக்ஷிதர்

அவர்கள் இயற்றிய உரையுடனும்

ஸ்ரீ காஞ்சி காமகோடி பீடாதிபதி ஸ்ரீ ஜகத்குரு

ஸ்ரீ சங்கராசார்ய ஸ்வாமிகள் அவர்கள்

ஸ்ரீ முகத்துடனும் கூடியது

முதல் பதிப்பு

ஸ்ரீ காமகோடி கோசஸ்தானம்

4, பிரான்ஸிஸ் ஜோஸப்புத் தெரு, சென்னை

1952

பதிப்புரிமை]

[விலை அணு 5

ஸ்ரீ காஞ்சி காமகோடி பீடாதிபதி ஜகத்குரு
ஸ்ரீ சந்த்ரசேகரேந்த்ர ஸரஸ்வதி
ஸ்ரீ சங்கராசார்ய ஸ்வாமிகள்

॥ श्रीः ॥

मुद्रा

श्रीमत्परमहंस परिव्राजकाचार्यवर्य

श्रीमच्छङ्करभगवत्पाद प्रतिष्ठित

श्रीकाञ्ची कामकोटिपीठाधिप जगद्गुरु

श्रीमच्चन्द्रशेखरेन्द्रसरस्वती श्रीपादैः

क्रियते नारायणस्मृतिः ॥

सामवेदीयाष्टब्राह्मणान्तर्भूतसामविधानब्राह्मण सारभूतया समस्त-प्रपञ्चभोगातिशाय्यपुनर्भवरूपमोक्षफलप्रदानैकतानया रात्रिप्रपदनमन्त्र-सहकृतकन्याकुमारिणीदुर्गोपास्त्या राकायमाणां स्तुतिरूपां दुर्गाचन्द्रकलां श्रीमदप्पयदीक्षितेन्द्रचतुरधिकशतप्रबन्धेष्वन्यतमां श्रीदुर्गासप्तशतीसार-सङ्ग्रहरूपां सरलमधुरपदवाक्यगर्भां महिषासुरसंहारप्रभृतिपरदेवताबहु-लीलाप्रकाशिकां बहुभक्तजनतोपकाराय द्रविडभाषानुवादोपेतां श्री-कामकोटिकोशस्थाने मुद्रापितां साक्षात्कृत्य सन्तुष्यामः । तामिमां श्रीदुर्गाचन्द्रकलास्तुतिमनुसन्ध्यमनुसन्दधानाः देशकालदोषकृतसर्वोप-द्रवनिवृत्तिपूर्वकं मोक्षान्तसकलभाग्यजातं प्राप्नुवन्त्वित्याशास्महे ॥

विजययात्रास्थानम्
श्रीमध्यार्जुनक्षेत्रम्
नन्दननामसं०
भाद्रपदामावास्या

इति
नारायणस्मृतिः

ஸ்ரீ:

ஸ்ரீமுகம்

முத்திரை

ஸ்ரீமத் பரமஹம்ஸ பரிவ்ராஜக ஆசார்யவர்யாளான ஸ்ரீமத் சங்கர பகவத்பாதர்களினால் ப்ரதிஷ்டை செய்யப்பெற்ற ஸ்ரீகாஞ்சி காமகோடி பீடாதீச்வரர்களான ஸ்ரீ ஜகத்குரு ஸ்ரீமத் சந்த்ரசேகரேந்த்ரஸரஸ்வதீ ஸ்ரீ பாதர்களால் நாராயணஸ்மரணம் செய்யப்படுகிறது.

ஸாமவேதத்திலடங்கிய எட்டு ப்ராம்மணங்களில் ஒன்றான **ஸாமவிதானம்** என்ற பிராம்மணத்தினுடைய உட்கருத்தாக அமைந்துள்ளதும், உலகனைத்துமுள்ள ஸுகங்களைக் காட்டிலும் சிறந்தோங்கி விளங்கும் "பிறப்பின்மை" என்ற மோக்ஷமென்ற மேலான பயனை யளிப்பதில் ஒரே ஸாதனமாக உள்ளதுமான ராத்ரிஸூக்தங்களோடு கூடிய கன்யாகுமாரியான துர்க்கையினுபாஸனையினால் பூர்ணிமாபோல் சிறந்து விளங்குவதும், ஸ்ரீமதப்பயதீக்ஷிதர்களாலியற்றப்பட்ட 104 கிரந்தங்களில் ஒன்றானதும், ஸ்ரீதுர்காஸப்தசதீ என்ற கிரந்தத்தினுடைய ஸாரத்தின் சுருக்கமாக உள்ளதும், எளியதும் இனியதுமான பதங்களுடனும் வாக்கியங்களுடனும் அமையப் பெற்றதும், மஹிஷாஸுரஸம்ஹாரம் தொடங்கி ஜகன்மாதாவினது பல லீலைகளைத் தெளிவுப்படுத்துகின்றதுமான **துர்காசந்த்ரகலா ஸ்தோத்திரத்தை** பக்தர்களனைவர்க்கும் நன்மைக்காகவே தமிழ் மொழிபெயர்ப்புடன் ஸ்ரீகாமகோடி கோசஸ்தானம் வெளியிடுவதைக் கண்ணுற்று மிக்க ஆனந்தமடைகின்றோம்.

அத்தகைய பெருமைவாய்ந்த இந்த **ஸ்ரீதுர்காசந்த்ரகலா ஸ்துதியை** ஸந்த்யாகாலங்கள்தோறும் தினமும் மனச்சாந்தியுடன் பாராயணம் செய்பவர்கள் தேசத்தாலும் காலத்தாலும் ஏற்பட்ட தோஷங்களால் உண்டான ஆபத்துக்களனைத்தையும் விலக்கிக்கொள்வதுடன் மோக்ஷம் வரையுள்ள பல பாக்கியங்களையுமடைய வேண்டுமென ஆசீர்வதிக்கின்றோம்.

விஜயஸ்தானம்
ஸ்ரீமத்யார்ஜுன க்ஷேத்ரம்
நந்தன வருஷம் பாத்ரபதமீ
அமாவாஸ்யா

நாராயணஸ்ம்ருதி

பீடிகை

நமது அனாதியான அத்வைத ஸித்தாந்தமானது மதாந்தரங்களால் ஆக்ரமிக்கப்பட்டு தீனதசையை யடைந்தபொழுது வித்யாதிபதியான பரமேச்வரன் ஸ்ரீமத் பகவத்பாதாசாரியாளாக அவதரித்து அம்மதாந்தரங்களை கண்டனம் செய்து அத்வைத மதத்தை நிலை நாட்டினார். இது அநேக நூற்றாண்டுகளுக்கு முன்பு. பிறகு 300 வருஷங்களுக்கு முன்பு, மறுபடியும் அந்த மாதிரி க்லேசம் ஏற்பட்ட பொழுது ஸ்ரீமதப்பய்ய தீக்ஷிதரென்ற பெயருடன் பரசிவன் அவதரித்து அந்த க்லேசங்களுக்குக் காரணமான மதங்களை யழித்து அத்வைதமதத்தை ப்ரதிஷ்டை செய்தார். மேலும் வ்யாஸாசாரியாள் செய்த பிரும்மஸூத்ரங்களின் சைவஸித்தாந்தத்தை யனுசரித்துச் செய்த ஸ்ரீ கண்டாசாரியாளின் பாஷ்யத்திற்கு சிவார்கமணி தீபிகை என்ற வ்யாக்யானம் செய்து அத்வைதானுபவத்திற்கு முக்கியபடியாகவுள்ள சிவோபாஸனையை விளக்கும் சைவமதத்தையும் பரிஷ்கரித்துப் பரவச் செய்தார். அத்வைத மதானுஸாரியான ஸ்ரீமதாசாரிய பாஷ்யத்திற்கும் ந்யாயரக்ஷாமணி, கல்பதரு பரிமளம் முதலிய சாஸ்திர க்ரந்தங்களையும் ஸித்தாந்த லேசஸங்க்ரஹம் முதலிய ப்ரகரண க்ரந்தங்களையும் ஆத்மார்ப்பணஸ்துதி முதலிய சிறிய ஸ்தோத்ர க்ரந்தங்களையும் இவ்விதம் 104 க்ரந்தங்களைச் செய்து, உலகிற்கு, அளவற்ற உபகாரம் செய்தாரென்பது அறிஞர்கள் அறிந்த விஷயம்.

உலகிலுள்ள எல்லா பிராணிகளும் சிறிதேனும் துக்கமில்லாமல் ஸுகத்தை மட்டுமே யனுபவிக்க

வேண்டுமென்று கருதுகின்றனர். துக்க ஸம்பந்தமில்லாத ஸுகம் (ஆனந்தம்) என்பது மோக்ஷம். ஆகவே எல்லோருக்கும் மோக்ஷத்தில் ஆவலிருக்கும் என்பதில் ஐயமில்லை. அந்த மோக்ஷத்திற்கு ஸாதநமாயுள்ளது ஆத்மஜ்ஞானம் ஒன்றுதான், வேறு ஸாதனமில்லை. **तमेव विदित्वातिमृत्युमेति नान्यः पन्था विद्यतेऽयनाय।** என்று வேதம் கூறுகிறது. ஆத்ம ஞானத்தை அம்பிகையின் ப்ரஸாதத்தினுலடையலாமென்பது அம்பிகைக்கு பிரும்ம வித்யை என்ற பெயர் இருப்பதொன்றே அறிவிக்கிறது. அவ்விதமே காளிதாஸனும், **देशिकरूपेण दर्शिताभ्युदयाम्** என்று வித்யையை உபதேசிக்கு மாசிரியரனைவரும் பரதேவதையின் அம்சமென்று சொல்லுகிறுன். இது கேனுேபநிஷத்தில் நன்கு விளங்கிறது.

ஸாமவேதமென்பது ஆயிரம் சாகைகளுடன் கூடியது. அதில் கௌதம சாகை தலவகார சாகை என்ற இரண்டு சாகைகளே தற்காலம் காணப்படுகின்றன. கேனுேபநிஷத் தலவகார சாகையின் உபநிஷத். இந்த உபநிஷத்தில் பிரும்ம ஸ்வரூபத்தை கையில் பிடிததுக் காண்பிப்பதுபோல் **तदेव ब्रह्म त्वं विद्धि नेदं यदिदमुपासते।** என்று பல அடையாளங்களைச் சொல்லி அதுதான் பிரும்மம், உபாஸிக்கப்படுகின்ற இதல்லவென்று நன்கு விளக்கிக் கூறுகிறது. உலகத்திலும் 'கெட்ட பிரும்மத்தைக் கேனத்தில் தேடு' என்று பழமொழி வழங்கப்படுகின்றது. இந்த உபநிஷத் மாணவன் ஆசிரியரைக் கேள்வி கேட்பது போலும் ஆசிரியர் அதற்குத் தகுந்த விடையளிப்பது போலும் பிரும்ம ஸ்வரூபத்தை நமக்கு நன்கு உபதேசிக்கின்றது. ஸ்ரீ பகவத்பார்தாசாரியாள் உபநிஷத்துக்களுக்கு பாஷ்யம் (அர்த்தம்) எழுதியிருக்கிறுர்கள். ஒவ்வொரு உபநிஷத்திற்கும் ஒவ்வொரு

பாஷ்யந்தான் இருக்கிறது. இந்த கேனோபநிஷத்துக்கு மட்டும் பதபாஷ்யம் வாக்யபாஷ்யம் என்று இரண்டு பாஷ்யங்கள் இருக்கின்றன. இவ்விதம் ஒரே உபநிஷத்திற்கு இரண்டு பாஷ்யம் எழுதியது மற்ற உபநிஷத்துக்களைக் காட்டிலும் பாஷையில் காடின்யமென்றோ துரூஹமான அர்த்தத்தில் க்லேசமென்றோ சொல்வதற்கில்லை. ஆனால் ஒரு விசேஷமிருக்கவேண்டும். அது இவ்விதமிருக்கலாமென்று தோன்றுகிறது. பரதேவதையானவள் நேரில் தோன்றி இந்திராதிகளுக்கு பிரும்மோபதேசம் செய்தாளென்ற மற்ற உபநிஷத்துக்களுக் கில்லாத பெருமை இந்த உபநிஷத்துககே அமைந்திருக்கிறது. ஆகையினால் இரண்டுதரம் அனுஸந்தானம் செய்தார்கள். கேனோபநிஷத்தின் சுருக்கமாவது :—ஒரு ஸமயம் தேவாஸுரயுத்தம் நடந்தது. அதில் தேவர்கள் ஜயமடைந்தார்கள். நம்முடைய பராக்ரமத்தினால் அஸுரர்களை ஜயித்தோமென்ற அஹங்காரம் தேவர்களுக்கு ஏற்பட்டது. இதை பகவான பொறுக்கவில்லை. பகவான் தன்னைச்சேர்ந்தவர்கள் கர்வமடைந்தால் பொறுப்பதில்லை. உடனே தேவர்கள் ஆகாயத்திற்கும் பூமிக்குமாக ஒரு ஒளியைக்கண்டார்கள். அதை அறிய விரும்பிய தேவேந்திரன் அக்னியைக் கூப்பிட்டு அது என்ன என்று அறிந்து வரும்படி அனுப்பினார். அங்கு சென்ற அக்னியை நீ யார், எந்த சக்தியுள்ளவனென்று அந்த தேஜோமயமான பூதம் கேட்டது. நான் அக்னி, இவ்வுலகை முழுவதையும் எரிக்கும் சக்தி எனக்குண்டு என்று பதில் சொன்னார். அந்த பூதம் அக்னியின் எதிரில் ஒரு புல்லை போட்டு அதை எரிக்கும்படி சொல்லியது. அக்னி தன் பூர்ண சக்தியால் முயன்றும் அந்த புல்லை எரிக்க முடியவில்லை. இவ்விதம் அக்னி அவமதிக்கப்பட்டுத் திரும்பிய பொழுது வாயுவை

அனுப்பிவைத்தார், அவரும் அதே மாதிரி திரும்பினர். பிறகு ஸ்ரீதேவேந்திரன் நேரில் போய் பார்த்தார். அந்த பூதம் மறைந்து விட்டது. ரொம்பவும் வருந்தினர். வெகு காலம் அங்கேயே நின்று த்யானம் செய்தார். லக்ஷவருஷ காலம் மாயா பீஜத்தை ஜபம் செய்தாரென்று தேவீ பாகவதம் கூறுகிறது. பிறகு அந்த இடத்தில் அநேகா பரணங்களுடனும் மனதைக் கவரக்கூடிய காந்தியுடனும் ஹிமவானின் புத்ரியாக அவதரித்த உமா என்ற பரதேவதை தோன்றினாள். "முன் தோன்றிய தேஜோ மயமான ரூபம் ப்ரும்மஸ்வரூபம்; அதனுடைய மஹிமை யால் நீங்கள் அஸுரர்களை ஜயித்தீர்கள்" என்று தேவேந்திரனுக்கு பிரும்மோபதேசம் செய்தாள். இவ் விதம் இந்திராதி தேவர்களுக்கு பராசக்தியின் ப்ரஸாத த்தினல் பிரும்ம ஞானம் உண்டாயிற்று.

ஸாமவேதத்தில் மற்றொரு சாகை கௌதும சாகை. அது ஏழு கானங்களுடனும் எட்டு பிராம்மணங்களுட னும் வழங்கப்படுகிறது. பிராம்மணங்களாவது 1. ப்ரௌ டம், 2. ஷட்விம்சம், 3. ஸாமவிதானம், 4. ஆர்ஷேயம், 5. தேவதாத்யாயம், 6. உபநிஷத், (சாந்தோக்யம்) 7. ஸம் ஹிதோபநிஷத், 8. வம்சம் என்று எட்டு வகைப்படும்.

ஆருவதான சாந்தோக்யோபநிஷயத்தின் ஆருவது அத்யாயத்தில் உலகம் ஸத்ரூபமான பிரம்மஸ்வரூபத்தி லிருந்து உண்டாகிறதென்று பலவித யுக்திகளையும் உதாஹரணங்களையும் கொண்டு நிரூபணம் செய்து அந்த பிரும்ம ஸ்வரூபம் நீயே தான் என்று ஒன்பது உதாஹரணங்களைச் சொல்லி நன்கு விளக்கியிருக்கிறது. மூன்ருவதான ஸாமவிதானப் ப்ராம்மணம் மூன்றக்னி களால் செய்யக்கூடிய அக்னிஹோத்ரம் முதலிய கார்யங் களைச் செய்ய சக்தியற்றவர்களுக்கு சில ஸாமாக்களை

ஜபிப்பதால் அக்னி ஹோத்ரம், இஷ்டி, அக்னிஷ்டோமம் முதலிய பெரிய யாகங்கள் இவைகளைச் செய்த பயனை யடையலாமென்றும் புத்ரன், பசு, ரோக மின்மை, ஆயுள், அன்னலாபம் முதலிய இவ்வுலகில் அனுபவிக்கக்கூடிய பயன்களை யுமடையலாமென்றும் கூறுகின்றது. இவ்விதம் சொல்லி முடிவில் மறு பிறப் பில்லாமைக்கு ஸாதனமான உபாஸனம் ஒன்றைச் சொல்லுகிறது. அதற்கு ராத்ரி உபாஸனம் என்று பெயர். அந்த உபாஸனத்தினுல் உபாஸிக்கத் தகுந்த தேவதையை, கன்யாம், குமாரிணீம், பாசஹஸ்தாம் என் றெல்லாம் குறிப்பிடுகிறபடியால் அவள் துர்காதேவீ என்றபிப்ராயப்பட்டு ஸ்ரீ தீக்ஷிதரவர்கள் இந்த புஸ்தகத் தில் அதை விளக்கியிருக்கிருர்கள். துர்கையின் உபா ஸனத்தினுல் பிரும்மலோகம் சென்று அங்கு ப்ரும்ம விசாரம் செய்து ப்ரும்மாவுடன் மோக்ஷமடையலாமென் றும் கூறியிருக்கிருர்கள்.

இவ்விதம் ஸாமவேதத்தில் தற்காலம் காணப்படும் கௌதம. சாகை தலவகார சாகை என்ற இரண்டு சாகை களில் ஸாமவிதாகப்ராம்பணம் கேநோபநிஷத் என்ற கிரந்தங்களில் க்ரியாசக்தி ப்ரதானமான துர்கையின் உபாஸனத்தினுலும் ஞானசக்தி ப்ரதானமான பார்வதி யின் ப்ரஸாதத்தினுலும் தத்வ ஞானத்தை யடைந்து அனேக ஜன்மாக்களின் தபோபலத்தால் அடையக் கூடிய அகண்டாநந்தரூப மோக்ஷத்தையடையலாமென் பது நன்கு விளங்குகிறது.

துர்காசந்திரகலா ஸ்துதி என்ற இந்த புஸ்தகம் ஸாமவேதம் கௌதம சாகையில் அவதரித்த ஸ்ரீமான் அப்பய்ய தீக்ஷிதரவர்களால் செய்யப்பட்டு அவராலேயே வ்யாக்யானமும் செய்யப்பபட்டுள்ளது. இது 1908 இல்

புதுக்கோட்டை P. A. ராமஸ்வாமி சாஸ்திரிகளால் கும்பகோணம் ஸ்ரீவித்யாப்ரஸ்ஸில் நாகரலிபியில் அச்சிடப்பட்டுமிருக்கிறது.

16 ச்லோகங்களால் தேவீமாஹாத்ம்யத்திலுள்ள மூன்று சரித்ரங்களையும் விசதமாகக்கூறி அங்குள்ள ஒவ்வொரு ஸ்தோத்ரத்திற்கும் பலச்ருதியை நன்கு விளக்கி வராஹபுராணம், ஸ்ரீமத் பாகவதம், ஹரிவம்சம், சிவபுராணம், பாஞ்சராத்ராகமம், ஸாமவிதானம் முதலிய க்ரந்தங்களிலுள்ள தேவியின் விஸ்தாரமான சரித்ரங்களைச் சுருக்கமாக நன்கு விளக்குகிறது. அந்தந்த புராணங்களில் அஸுரர்கள் தவத்தின் மஹிமையால் பல விதவரன்களைப்பெற்று ஸாதுக்களையும் ஸத்தர்மங்களையும் பலவிதத்தில் துன்புறுத்தினர்களென்றும் பராசக்தியான தேவி அந்த வரன்களுக்கு விரோதமின்றி அவதாரம் செய்து அவ்வஸுரர்களை யழித்தாளென்றும் கூறப்பட்டிருக்கிறது. தற்காலத்திலும் ஸாதுக்களுக்கும் தர்மங்களுக்கும் பலவித துன்பங்கள் ஏற்பட்டிருக்கின்றன. அதற்குக் காரணமான அஸுர்கள் மட்டும் புலப்படவில்லை. ஆனாலும் அவர்களுடைய கார்யம் இருப்பதால் அவர்களும் ஒரு விதமாக இருக்கத்தான் வேண்டும். அவர்களை அறிந்து அடக்கினாலொழிய நம் நாட்டிற்கு ஆணிவேர் போன்ற தர்மம் நிலையுடன் நிற்காது. அவ்விதமறிய நமக்கு சக்தி இல்லாவிட்டாலும் பரதேவதையின் அருள் இருந்தால் அவர்களும் அடங்குவார்கள், தர்மமும் செழிக்கும். அம்பிகையின் அருள் உண்டாவதற்கு அவளை உபாஸிக்கவேண்டும். அந்த உபாஸனத்தை புராணங்களில் பல விதமாகக் கூறியிருக்கிறார்கள். அம்பிகையின் திருவிளையாட்டுக்களை நன்கு தெரிந்து கொண்டு அவளை த்யானம் செய்தாலும் அம்பி

கையின ப்ரஸாதம் ஏற்படும். அவ்விதம் தெரிந்து கொள்ள இந்த ஸ்தோத்ரம் ஸுலபஸாதனமாயுள்ளது. விஸ்தாரமான பல சரித்ரங்களை மிகச் சுருக்கிக் கூறியிருக்கிறது. ஆகையினால் பாலர்கள் ஸ்த்ரீகள் முதல் எல்லோரும் இந்த ஸ்தோத்ரத்தை காலை மாலை படித்து த்யானம் செய்தால் தற்காலம் ஏற்பட்ட க்ஷாமக்ஷோபாதிகள் நிவர்த்தியடைந்து ஸுபிக்ஷ முண்டாகு மென்பதற்கு ஐயமில்லை. இவ்விதமே இப் புஸ்தகத்தின் முடிவில் கூறப்பட்டுள்ளது:—

देशकालेषु दुष्टेषु दुर्गाचन्द्रकलास्तुतिः ।
सन्ध्ययोरनुसन्धेया सर्वापद्विनिवृत्तये ॥

தேச காலங்கள் கெட்டிருக்கும்பொழுது தேவியின் சந்திரகலாஸ்துதியை இரண்டு காலங்களிலும் (காலை மாலை) படித்து த்யானம் செய்பவர்களுக்கு எல்லா ஆபத்துக்களும் நீங்குகிறது. இவ்விதமே சம்பகாரண்யமென்ற மன்னார் குடியில் வஸித்து வந்த கீர்தி சரீரர்களாக விளங்குகின்ற ஸ்ரீமான் ராஜு சாஸ்திரிகளவர்கள காலை மாலை இருகாலங்களிலும் இதை ஜபிதது வந்தார்களென்று அவர்களது தின சர்யையில் கூறப்படுகிறது.

இக்க்ரந்தம் ஸ்ரீ காஞ்சீ காமகோடி பீடாதிபதிகளான ஸ்ரீ ஜகத்குரு பரமாசாரியாளின் அனுக்ரஹ பூர்வகமான ஆஜ்ஞையை அவலம்பித்து மொழி பெயர்த்து அவச்யமான இடங்களில் கருத்துக்களையும் விளக்கி எழுதப்பட்டது. பிழை இருந்தால் திருத்தி அனுக்ரஹம் செய்யுமாறு கேட்டுக்கொள்ளுகிறேன்.

இப்படிக்கு
ம. ராமனாத தீக்ஷிதர்

॥ शुभमस्तु ॥

॥ श्रीशिवाभ्यां नमः ॥

॥ दुर्गाचन्द्रकलास्तुतिः ॥

वेधोहरीश्वरस्तुत्यां विहर्त्रीं विन्ध्यभूधरे ।
हरप्राणेश्वरीं वन्दे हन्त्रीं विबुधविद्विषाम् ॥ १ ॥

1. வேதொஹரீச்வரஸ்துத்யாம்
விஹர்த்ரீம் விந்த்ய பூ(ஹூ) த(ய)ரே ।
ஹரப்ராணேச்வரீம் வந்தே
ஹந்த்ரீம் விபு(பு) த(ய) வித்விஷாம் ॥

பிரும்மா, விஷ்ணு, ஈச்வரன் இவர்களால் துதிக்கத் தகுந்தவளும், விந்த்யமலையில் விளையாடுபவளும், தேவர்களின் விரோதிகளான அஸுரர்களைக் கொல்பவளுமான பரமசிவனின் ப்ராணநாயகியான பார்வதியை நமஸ்கரிக்கின்றேன்.

தேவீ மாஹாத்ம்யத்தில் பிரும்ம ஸ்துதியையும் ஹரிவம்சத்தில் விஷ்ணு ஸ்துதியையும் வராஹ புராணத்தில் ஈச்வர ஸ்துதியையும் காணலாம்.

अभ्यर्थनेन सरसीरुहसंभवस्य
त्यक्त्वोदिता भगवदक्षिपिधानलीलाम् ।
विश्वेश्वरी विपदपागमने पुरस्ता-
न्माता ममास्तु मधुकैटभयोर्निहन्त्री ॥ २ ॥

2. அப்யர்த்தநேந ஸரஸீருஹஸம்பவஸ்ய
த்யக்த்வோதிதா பகவதக்ஷிபிதாநலீலாம் |
விச்வேச்வரீ விபதபாகரணே புரஸ்தாத்
மாதா மமாஸ்து மதுகைடபயோர்நிஹந்த்ரீ ||

தாமரையிலுதித்த பிரும்மாவின் வேண்டுகோளால் பகவானின் கண்களை மூடுவதென்ற விளையாட்டை விட்டு விட்டுத் தோன்றியவளும், மதுகைடபர்கள் என்ற அசுரர்களைக் கொன்றவளாயும், உலகத்திற்கு ஈச்வரியாயுமுள்ள தாய் என் ஆபத்துக்களை நீக்குவதற்காக எதிரில் தோன்றட்டும்.

இந்த ச்லோகத்தில் தேவீ மாஹாத்ம்யத்தின் முதல் சரித்ரமான மதுகைடப வதம் ஸங்க்ரஹிக்கப்பட்டுள்ளது. திருப்பாற்கடலில் ஸ்ரீமந் நாராயணன் யோக நித்ரையிலிருக்கும்பொழுது அவரது காதுகளின் மலத்திலிருந்து மதுகைடபர்கள் என்ற இரு அசுரர்கள் உண்டாகி தொப்புள் தாமரையிலிருக்கும் பிரும்மாவைத் துன்புறுத்தினர்கள். அதைத் தாங்க முடியாத பிரும்மா விஷ்ணுவைத் துதித்தார். யோக நித்ராரூபிணியான அம்பிகையையும வேண்டினர். அம்பிகை விஷ்ணுவை நித்ரையைவிட்டு எழுப்பி மதுகைடபர்களைக் கொல்லும்படித் தூண்டினள். பிறகு பகவான் மதுகைடபர்களைக் கொன்றார். இவ்விதம் மதுகைடப வதம் பகவானல் செய்யப்பட்டபோதிலும் தேவியின் தூண்டுதலால் செய்யப்பட்டதால் தேவி செய்ததாகக் கூறப்பட்டுள்ளது.

प्राङ्निर्जरेषु निहितैर्निजशक्तिलेशै-
रेकीभवद्भिरुदिताखिललोकगुप्त्यै ।
संपन्नशस्त्रनिकरा च तदायुधस्थै-
र्माता ममास्तु महिषान्तकरी पुरस्तात् ॥ २ ॥

3. ப்ராங்நிர்ஜரேஷு நிஹிதைர்நிஜ சக்திலேசை
ரேகீபவத்பிருதிதாகிலலோகரக்ஷ்ப்தையை |
ஸம்பந்நசஸ்த்ரநிகராச ததாயுதஸ்தைர்
மாதா மமாஸ்து மஹிஷாந்தகரீ புரஸ்தாத் ||

முன்பு தேவர்களிடத்தில் வைக்கப்பட்ட தன் சக்தியின் லேசங்கள் ஒன்று சேர்ந்து உலகத்தைக் காப்பதற்காகத் தோன்றியவளும், அந்த தேவர்களின் ஆயுதங்களிலிருந்து வெளிவந்த சக்தி லேசங்களாலுண்டான அநேக ஆயுதங்களுடன்கூடியவளுமான மஹிஷாஸுர மர்தினியான அம்பிகை என் எதிரில் தோன்றட்டும்.

இந்த ச்லோகத்தில் தேவீ மாஹாத்ம்யத்தின் இரண்டாவது அத்யாயத்திலுள்ள தேவியின் மத்யம சரித்ரம் மஹிஷாஸுரமர்தனம் ஸங்க்ரஹிக்கப்பட்டுள்ளது. அங்கு ஒவ்வொரு தேவர்களின் சரீரத்திலிருந்து அந்த சக்திகள் வெளிக்கிளம்பி ஒன்ருகச் சேர்ந்து தேவியின் சரீரமாகத் தோன்றியதென்றும் அந்த தேவர்களின் ஆயுதங்களிலிருந்து கிளம்பிய சக்திகளாலுண்டான ஆயுதங்களை தேவர்கள் தேவிக்கு கொடுத்தார்களென்றும் கூறியிருக்கிறது. இதனுல் தேவி பிறருடைய சக்தியால் மஹிஷாஸுரனைக் கொன்றதாகத் தோன்றுகிறது. ஆனுலும் ப்ரும்மாதி தேவர்களுக்கு ஸ்ருஷ்டி முதலிய கார்யங்களைச் செய்யத் திறமையளிக்கும் சக்திகளை தேவர்களுக்கு முதலில் தேவி தன்னிடமிருந்து கொடுத்ததாகவும் அவைகளை மஹிஷாஸுர ஸம்ஹாரத்திற்காக வாங்கிக் கொண்டதாகவும் அபிப்ராயம். இவ்விதமே சும்பன் என்ற அசுரன் बलावलेपादुष्टे त्वं मा दुर्गे गर्वमावह। अन्यासां बलमाश्रित्य युध्यसे त्वतिमानिनि ॥ ஏ துஷ்டையான துர்கே, பலம் படைத்த கொழுப்பினுல் கர்வமடையாதே, பிறருடைய பலத்தைக்

கொண்டு போர் புரிகிருய், என்று சொல்லும்பொழுது **एकैवाहं जगत्यत्र द्वितीया का ममापरा। पश्यतां दुष्ट मय्येव विशन्त्यो मद्विभूतयः॥** ஏ துஷ்டா இவ்வுலகில் நான் ஒருவள் தான் இருக்கிறேன் ; என்னைத் தவிர்த்து வேறு இரண்டாவதாக இருக்கிறது யார்? இவ்வளவு தேவிகளும் என் சக்திகளே, என்னிடத்திலேயே லயமடைகிருர்கள் பார் என்று தேவிசொல்லும்பொழுது அவ்விதமே ப்ரும்மாணீ முதலியவர்கள் தேவியின் சரீரத்தில் லயமடைகிருர்கள் என்று சொல்லப்பட்டிருக்கிறது.

प्रालेयशैलतनयातनुकान्तिसम्प-
त्कोशोदिता कुवलयच्छविचारुदेहा ।
नारायणी नमदभीप्सितकल्पवल्ली
सुप्रीतिमावहतु शुम्भनिशुम्भहन्त्री ॥ ४ ॥

4. ப்ராலேய சைலதநயா தநுகாந்திஸம்பத்
கோசோதிதா குவலயச்சவிசாருதேஹா ।
நாராயணீ நமதபீப்ஸிதகல்பவல்லீ
ஸுப்ரீதிமாவஹது சும்பநிசும்பஹந்த்ரீ ॥

ஹிமவானின் புத்ரியான பார்வதியின் சரீர காந்தியின் மிகுதியாலுண்டானவளும், நீலோத்பலம் போன்ற காந்தியையுடைய சரீரமுள்ளவளும் நமஸ்கரிப்பவர்களின் இஷ்டத்தைக் கொடுக்கும் கல்பக் கொடி போலுமுள்ளவளும் சும்ப நிசும்பர்களைக் கொன்றவளுமான நாராயணீ சந்தோஷத்தை யுண்டுபண்ணட்டும்.

இந்த ச்லோகத்தில் தேவி மாஹாத்மயத்தின் ஐந்து முதல் ஆறு அத்யாயங்களால் கூறப்பட்டுள்ள மந்திரி சேனையுடன் கூடிய சும்ப நிசும்பவதம் தேவியின் உத்தர சரித்ரம் சுருக்கி வரையப்பட்டுள்ளது. சும்ப

நிசும்பர்கள் கடுந்தவம் புரிந்து பிரும்ம தேவனிடமிருந்து கர்ப்பசம்பந்தமில்லாத கன்னிகையைத் தவிர்த்து மற்ற ஒருவராலும் கொள்ளப்படாத வரனைப் பெற்று இந்திராதி தேவர்களைத் துன்புறுத்தி வந்தார்கள். அவர்களை நாசம் செய்யும்படி பிரும்மதேவன் பரமசிவனிடம் பிரார்த்திக்க பரமசிவன் பார்வதியைப் பார்த்து கோபத்துடன் காளி என்று கூப்பிட்டார். உடனே அவள் கடுந்தவம்புரிந்து கருப்பான அந்த சரீரத்தை விட்டு தபோமஹிமையால் பொன்மயமான உருவத்தையடைந்தாள். ஆகையினால் அவளுக்கு கௌரீ என்ற பெயர் வந்தது. அவளால் விடப்பட்ட கருத்த சரீரத்திலிருந்து காளீ என்ற பெயருடன் தேவீகன்னிகையாகத் தோன்றினாள். அவள் கர்ப்பசம்பந்தமில்லாமலும் புருஷசம்பந்தமில்லாமலுமிருப்பதால் அவளால் சும்பநிசும்பர்கள் கொல்லப்பட்டார்கள். இவள் சரீர கோசத்திலிருந்து உண்டானபடியால் கௌசிகீ என்ற பெயர் ஏற்பட்டது. இவ்விதம் சிவபுராணம் வாயு ஸம்ஹிதையில் கூறப்பட்டுள்ளது.

विश्वेश्वरीति महिषान्तकरीति यस्याः
नारायणीत्यपि च नामभिरङ्कितानि ।
सूक्तानि पङ्कजभुवा च सुरर्षिभिश्च
दृष्टानि पावकमुखैश्च शिवां भजे ताम् ॥ ५ ॥

5. விச்வேச்வரீதி மஹிஷாந்தகரீதி யஸ்யா:
நாராயணீதயபிவ நாமபிரங்கிதாநி ।
ஸூக்தாநி பங்கஜபூவாச ஸுரர்ஷிபிஸ்ச
த்ருஷ்டாநி பாவகமுகைஸ்ச சிவாம் பஜே
தாம் ॥

விச்வேச்வரீ, மஹிஷாந்தகரீ, நாராயணீ என்ற நாமங்களடங்கிய ஸூக்தங்கள் பிரும்மதேவன், மற்றதேவர்கள், ரிஷிகள், அக்னி முதலியவர்கள் இவர்களால் கண்டுபிடிக்கப்பட்டன. இவ்விதம் துதிக்கப் பெற்ற தேவியை ஸேவிக்கின்றேன்.

தேவீ மாஹாத்ம்யத்தில் முதல் அத்யாயத்தில் **विश्वेश्वरीं जगद्धात्रीं** என்று ஆரம்பித்து பிரும்மா துதிக்கின்ருர். மஹிஷாஸுரவதத்திற்குப் பிறகு **देव्या यया ततमिदं जगदात्मशक्त्या** என்று ஆரம்பித்து **तामम्बिकामखिलदेवमहर्षिपूज्याम्**, என்று தேவர்களாலும் மஹரிஷிகளாலும்பூஜிக்கத்தகுந்தவள் என்று சொல்லப்படுகின்றது. சும்பவதமான பிறகு **देव्या हते तत्र महासुरेन्द्रे सेन्द्रास्सुरा वह्निपुरोगमाश्च** என்று அக்னி முதலிய தேவர்கள் துதிக்கிருர்கள். ஸூக்தங்கள் என்பது வேதத்தில் சொல்லுகிற பழக்கம்; அவ்விதம் இங்கும் வேதத்தில் உள்ளவைகளை பிரும்மாதிகள் கண்டார்கள். அப்படியே துதித்தார்களென்ற கருத்துடன் ஸூக்தங்களென்று கூறப்படுகின்றது.

उत्पत्तिदैत्यहननस्तवनात्मकानि
संरक्षकाण्यखिलभूतहिताय यस्याः ।
सूक्तान्यशेषनिगमान्तविदः पठन्ति
तां विश्वमातरमजस्रमभिष्टवीमि ॥ ६ ॥

6. உத்பத்திதைத்யஹநநஸ்தவநாத்மகாநி
ஸம்ரக்ஷகாண்யகிலபூதஹிதாய யஸ்யா: ।
ஸூக்தாந்யசேஷநிகமாந்தவித: பட²ந்தி
தாம் விச்வமாதரமஜஸ்ரமபிஷ்டவீமி ॥

வேதத்தின் முடிவான உபநிஷத்துக்களையறிந்த பெரியோர்கள் எந்த தேவியின் ஆவிர்ப்பர்வம் அஸுர

ஸம்ஹாரம் ஸ்தோத்ரமென்ற தேவி மாஹாத்ம்யத்தைப் படிப்பது எல்லோருக்கும் ஹிதத்தைக் கொடுக்கக் கூடியதாயும் ஆபத்திலிருந்து காக்கக்கூடியதாயுமுள்ள தென்று சொல்லுகிருர்களோ அந்த உலக மாதாவான தேவியை எப்பொழுதும் துதிக்கின்றேன்.

தேவீ மாஹாத்ம்யத்தைப் படிப்பது நன்மையையும் துன்பமில்லாமையையும் கொடுக்கக் கூடியதென்று பொருள்.

ये वैप्रचित्तपुनरुत्थितशुम्भमुख्यै-
र्दुर्भिक्षघोरसमयेन च कारितासु ।
आविष्कृतास्त्रिजगदार्तिषु रूपभेदा-
स्तैरम्बिका समभिरक्षतु मां विपद्भ्यः ॥

7. யே வைப்ரசித்தபுநருத்திதஸும்பமுக்யைர்
துர்பிக்ஷகோரஸமயேநச காரிதாஸு ।
ஆவிஷ்க்ருதாஸ்த்ரிஜகதார்திஷு ரூபபேதா
ஸ்தைரம்பிகா ஸமபிரக்ஷது மாம்
விபத்ப்ய: ॥

விப்ரசித்தியின் குமாரர்கள், மறுபடியும் உண்டான சும்பன் முதலியவர்கள், இவர்களால் மூவுலகிற்கும் துர்பிக்ஷம் பலவித பயம் இவைகள் ஏற்படும்பொழுது எந்த தேவியானவள் ரக்ததந்திகை முதலிய அவதாரங்களையடைந்து காப்பாற்றினளோ அந்த ரூபங்களால் என்னை ஆபத்துக்களிலிருந்து காப்பாற்றட்டும்.

தேவீ மாஹாத்ம்யம் பதினோராவதத்யாயத்தில் நாராயணீ ஸ்தோத்ரத்தினல் துதிக்கப்பட்ட தேவீ அந்த அஸுரவதத்திற்காக பலவிதமாக அவதரித்தாளென்பது இங்கு கூறப்பட்டுள்ளது.

सूक्तं यदीयमरविन्दभवादिदृष्ट-
मावर्त्य देव्यनुपदं सुरथस्समाधिः ।
द्वावप्यवापतुरभीष्टमनन्यलभ्यं
तामादिदेवतरुणीं प्रणमामि देवीम् ॥ ८ ॥

8. ஸூக்தம் யதீயமரவிந்தபவாதி த்ருஷ்ட
மாவர்த்ய தேவ்யநுபதம் ஸுரதஸ்ஸமாதி: ।
த்வாவப்யவாபது ரபீஷ்டமநந்யலப்யம்
தாமாதிதேவதருணீம் ப்ரணமாமி தேவீம் ॥

ஸுரதன் ஸமாதி என்ற அரசனும் வைச்யனும் பிரும்மா முதலிய தேவர்களால் காணப்பட்ட எந்த தேவியின் ஸ்தோத்ரத்தை ஆவர்த்தி செய்து பிறரால் அடைய முடியாத விருப்பத்தை நிறைவேற்றிக் கொண்டார்களோ அந்த பரமசிவனின் நாயகியான தேவியை நன்கு நமஸ்கரிக்கின்றேன்.

இவ்விதம் ஏழு ச்லோகங்களால் தேவீ மாஹாத்ம்யம் ஸங்க்ரஹிக்கப்பட்டுள்ளது. பாஞ்சராத்ரம் லக்ஷ்மீ தந்திரத்தில் இதைப்பற்றி லக்ஷ்மீ தேவியானவள் தேவேந்திரனைப் பார்த்துக் கூறுகிறாள். ஸ்வாயம்புவமன்வந்தரத்தில் தேவர்களுக்கு நன்மையைச் செய்ய மஹிஷாஸுர மர்தினியாக அவதரித்தேன். அந்த அவதாரத்தில் தேவர்களிடமுள்ள என் சக்தியின் லேசங்கள் ஒன்று கூடி என் ஸ்வரூபத்தை உண்டுபண்ணின. அப்பொழுது தேவர்களால் துதிக்கப்பட்டு நொடிப்பொழுதில் மஹிஷாஸுரனைக் கொன்றேன். அந்த சமயம் தேவர்கள் செய்த ஸ்தோத்ரம் மஹிஷாந்தகரீஸூக்தம். அதை ஜபிப்பவர்கள் ஸர்வஸித்தியையும் அடைகிறார்கள். சிறந்த ஆதிபத்யத்தையுமடைகிறார்கள். பகவானின்

யோக நித்ரா ரூபிணியாகிய நான் மது கைடபவதம் செய்யும்பொருட்டு பிரும்மதேவனுல் துதிக்கப்பட்டேன். அதை ஜபம் செய்பவர் உலகத்தி லுள்ள எதையும் வசீகரிக்கலாம். தாமஸ மன்வந்தரத் தில் கௌரீசரீரத்திலிருந்து கௌசிகீ என்ற பெயருடன் ஆவிர்பவித்தேன். உலகத்தை ஹிம்ஸித்த ஸுாம்பநிஸுாம் பர்களைக் கொன்றேன். அப்பொழுது அக்னி முதலிய தேவர்கள் துதித்தார்கள். அந்த நாராயணீ ஸூக்தத்தை ஜபம் செய்து த்யானம் செய்பவர்கள் ஸர்வஜ்ஞர்களாக ஆகின்றனர். மறுபடியும் வைவஸ்வதமன்வந்தரத்தில் ஸுாம்பநிஸுாம்பர்கள் உண்டாகப் போகிருர்கள். நான் யசோதா கர்ப்பத்தில் உண்டாகி அவர்களைக் கொல்லப் போகிறேன். மறுபடியும் மாதுலம்புஷ்பம் போன்ற பற் களுடன் ரக்ததந்திகையென்ற பெயருடன் பயங்கர ரூப மாக அவதரித்து வைப்ரசித்தர்களை அழிக்கப்போகி றேன். அப்பொழுது தேவர்களும் மனிதர்களும் துதிப் பார்கள். நாற்பதாவது சதுர்யுகத்தில் நூறு வருஷ காலம் மழையின்மையால் உலகம் வருந்தும்பொழுது ரிஷிகளால் துதிக்கப்பட்டு அயோனிஜையாக நூறு கண் களுடன் ஆவிர்பவிக்கப்போகிறதாலும், சாகாஹாரத்து டன் தோன்றி ஜனங்களைக் காப்பாற்றியதாலும், சதாக்ஷீ என்றும் சாகம்பரீ என்றும் துதிக்கப் போகிருர்கள். அந்த அவதாரத்தில் துர்கமன் என்ற அஸுரனைக் கொல்வதால் துர்கை என்று சொல்வார்கள். சாகம்பரி யை ஸ்தோத்ரம் செய்பவன் அன்னபான ஸம்ருத்தியுடன் பூர்ணைச்வர்யத்தையடைகிருன். பிறகு ஐம்பதாவது சதுர்யுகத்தில் ரிஷிகளால் ப்ரார்த்திக்கப்பட்டு பயங்கர மாயும் அழகாயும் உருவமெடுத்து அரக்கர்களைக் கொல் லப்போகிறேன். அப்பொழுது பீமாதேவீ என்று துதிக் கப் போகிருர்கள். பிறகு அறுபதாவது சதுர்யுகத்தில்

அருணன் என்ற அஸுரனுல் உலகத்திற்கு ஹிம்ஸை ஏற்படும்பொழுது வண்டு உருவம் எடுத்து அவனைக் கொல்லப்போகிறேன். அப்பொழுது ப்ராமரீ என்று கொண்டாடப் போகிருர்கள். இவ்விதம் அஸுரர்களால் பயமுண்டாகும்பொழுதெல்லாம் ஆங்காங்கு தோன்றி அவர்களை நாசம் செய்வேன். இவ்வளவு அவதாரங்களிலும் தொடற்சியாயுள்ள மூலப்ரக்ருதியான மஹாலக்ஷ்மி ஒருவளே. அந்த தேவியை பிரும்மாதி தேவர்கள் துதிக்கின்றனர். नमो देव्यै, என்று ஆரம்பிக்கப்படும் ஸூக்தம் இஷ்டமான பயன்களைக் கொடுக்கும். इमां देवीम् என்று ஆரம்பிக்கப்படும் ஸூக்தம் க்லேசங்களைப் போக்கி உயர்ந்த ஐச்வர்யத்தைக் கொடுக்கும். மஹாத்மாவான வஸிஷ்டர் ஸ்வாரோசிஷ மன்வந்தரந்தில் ஸுரதன், ஸமாதி என்ற அரசனுக்கும், வைச்யனுக்கும் ஸ்துதிகளை உபதேசித்தார். அவர்கள் அதை ஆவர்த்திசெய்து இஷ்டஸித்தியையடைந்தார்கள். இதை ப்ராஹ்மண முகமாகக் கேட்டு ஜபம் செய்பவன் மாயையைக்கடந்து ஆத்மஞானத்தை யடைகிருன்; ஆபத்துக்களைக் கடக்கிருன்; எல்லாவித ஐச்வர்யங்களையுமடைகிருன்; ஸௌபாக்கியம், கீர்த்தி ஏற்படுகிறது.

இங்கு கூறப்பட்டுள்ள மஹாலக்ஷ்மி லக்ஷ்மி ஸரஸ்வதி பார்வதி என்ற பேதமில்லாத நிலையிலுள்ள பராசக்தியின் ஸ்வரூபமென்று அறியவும்.

माहिष्मतीतनुभवं च रुरुं च हन्तु-
माविष्कृतैर्निजरसादवतारभेदैः ।
अष्टादशाहतनवाहतकोटिसंख्यै-
रम्बा सदा समभिरक्षतु मां विपद्भ्यः ॥ ९ ॥

9. மாஹிஷ்மதீதநுஸம்பவ ருரும்ப ஹந்து
மாவிஷ்க்ருதைர்த்விஜரஸாஉவதாரஹேஹெஉ: |
அஷ்டாஉசாஹதநவாஹதகோடி ஸங்க்யை
ரம்பா ஸஹா ஸமஹிரக்ஷது மாம் விபஉர்ஹிப்ய:

மாஹிஷ்மதியின் குமாரனுன மஹிஷாஸுரனையும் ருரு என்ற அஸுரனையும் கொல்வதற்காக தன் சக்தியால் 18 கோடி கன்னிகைகளுடனும் 9 கோடி கன்னிகைகளுடனும் ஆவிர்பவித்த அம்பிகை ஆபத்துக்களிலிருந்து காப்பாற்றட்டும்.

இந்த சரித்ரம் வராஹ புராணத்திலுள்ளது. ஒரு ஸமயம் மஹா கைலாஸத்தில் பரமசிவன் ஆஸனத்திலமர்ந்திருக்கும்பொழுது பிரும்மதேவன் வந்து அஸுரர்களின் ஹிம்ஸையைத் தெரிவித்தார். ஸ்ரீ நாராயணனும் அங்கு வந்தார். அவர்கள் ஒருவர்க்கொருவர் பார்த்துக் கொண்டனர். அந்தப் பார்வையிலிருந்து ஒரு கன்னிகையுண்டானுள். அவள் அவர்களின் ஆஜ்ஞையை யனுசரித்து ஸத்வம் முதலிய குணங்களால் மூன்று உருவமாகத் தோன்றினுள். அதில் ஸாத்விக உருவம் ஸ்ருஷ்டி சக்தி பிரும்ம தேவனின் சரீரத்தில் புகுந்தது. ராஜஸ உருவமான பாலன சக்தி வைஷ்ணவீ. அவள் தனக்குச் சமமான அழகுள்ள 18 கோடி கன்னிகைகளை உண்டு பண்ணி மந்தர மலையில் ஒரு பட்டணத்தை ஸ்ருஷ்டித்து அதில் அவர்களுடன் விஹாரம் செய்துகொண்டிருந்தாள். விப்ரசித்தி என்ற அஸுரனின் பெண்ணுன மாஹிஷ்மதீ என்பவள் எருமை உருவமெடுத்து தவம் செய்கின்ற ஸிந்துத்வீபன் என்பவனை பயமுறுத்தி அவனது ஆச்ரமத்திலிருந்து விரட்டினுள். அவன் நீ எருமையாகக்கடவாயென்று சபித்தான். அப்பொழுது

வித்யுமதீ என்ற அஸுர கன்னிகையைப் பார்த்த ஸிந்து த்வீபனின் தேஜஸ் நழுவி விழுந்தது. அதை எருமை உருவங்கொண்ட மாஹிஷ்மதீ உட்கொண்டாள். அந்த கர்ப்பத்தில் உண்டானவன் மஹிஷாஸுரன். அவன் அந்த வைஷ்ணவியிடம் காமம்கொண்டு தூதனையனுப்பி ஞன். அந்த தூதன் அவள் வாசக்காபபாளால் அவமதிக்கப்பட்டான். பிறகு மஹிஷாஸுரன் நேரில் யுத்தத்திற்கு வந்தான். அம்பிகையானவள் 18 கோடி கன்னிகைகளுடன் ஸிம்ஹவாஹனத்தின் மீது ஏறி 20 கைகளுடன் தோன்றி அவனைக் கொன்ருள். தாமஸ உருவமான ஸம்ஹாரசக்தி ரௌத்ரீ. அவள் நீல மலையில் வசித்துவந்தாள். ஸமுத்ரத்தின நடுவில் ஒரு பட்டினத்தை நிர்மாணம் செய்து அதில் வசிக்கினற ருரு என்ற அஸுரன் தேவர்களைத் துன்புறுத்தினன். தேவர்கள் அவளை சரணமடைந்தார்கள். அப்பொழுது அவள் மந்தஹாஸம் செய்தாள். அவள் முகததிலிருந்து 9 கோடி கன்னிகைகள் பயங்கர ரூபத்துடன் அனேகா யுதங்களைத்தாங்கி வெளிக்கிளம்பிஞர்கள். அவர் களுடன் அம்பிகை அவனைக் கொன்ருள். இந்த சரித் ரம் இங்கு சுருக்கிக் கூறப்பட்டது.

एतच्चरित्रमखिलं लिखितं हि यस्या-
स्सपूजितं सदन एव निवेशितं वा ।
दुर्गं च तारयति दुस्तरमप्यशेषं
श्रेयः प्रयच्छति च सर्वमुमां भजे ताम् ॥ १० ॥

10. ஏதச்சரித்ரமகிலம் லிகிதம்ஹி யஸ்யாஸ்
ஸம்பூஜிதம் ஸதநஏவ நிவேஶிதம்வா ।
துர்கம்ச தாரயதி துஸ்தரமப்யசேஷம்
ச்ரேயஃ ப்ரயச்சதிச ஸர்வமுமாம் ஹஜே தாம் ॥

இந்த பராசக்தியின் சரித்திரத்தை முழுவதும் எழுதி பூஜித்தாலும் அல்லது வீட்டில் வைத்திருந்தாலும் கடக்கமுடியாத ஆபத்துக்களையும் கடக்கிறான். எல்லாவித மேன்மையையும் அடைகிறான். அந்த உமா தேவியை ஸேவிக்கிறேன்.

இவ்விதம் வராஹ புராணத்தில் கூறப்பட்டுள்ளது. ஸத்வ ரஜஸ் தமோ குணஸ்வரூபியான பராசக்தியின் ஆவிர்ப்பாவத்தை பக்தியுடனும் நியமத்துடனும் நவமியன்று கேழ்ப்பவன் ராஜ்ய லாபமடைகிறான். இந்த சரித்ரம் எழுதப்பட்டு எங்கு வைக்கப்பட்டிருக்கிறதோ அங்கு ஸர்ப்பம் திருடன் முதலிய பயமேற்படாது. பூஜிப்பவர்கள் மூன்றுலோகத்திலும் ஜயத்தையடைகிறார்கள். தன தான்ய பசு ஸ்த்ரீ ரத்னலாப மேற்படுகிது.

यत्पूजनस्तुतिनमस्कृतिभिर्भवन्ति
प्रीताः पितामहरमेशहरास्त्रयोऽपि ।
तेषामपि स्वकगुणैर्ददतीं वपूंषि
तामीश्वरस्य तरुणीं शरणं प्रपद्ये ॥ ११ ॥

11. யத்பூஜநஸ்துதிநமஸ்க்ருதிபிர்பவந்தி
ப்ரீதா:பிதாமஹரமேசஹராஸ்த்ரயோபி ।
தேஷாமபி ஸ்வககுணைர்ததீம் வபூம்ஷி
தாமீச்வரஸ்ய தருணீம் சரணம் ப்ரபத்யே ॥

எந்த தேவியின் பூஜை ஸ்துதி நமஸ்காரம் இவைகளால் பிரஹ்ம விஷ்ணு மஹேச்வரர்கள் ப்ரீதியடைகிறார்களோ, அந்த ப்ரஹ்மாதி தேவர்களுக்கும் தன் ஸத்வம் முதலிய குணங்களால் சரீரத்தைக் கொடுக்கும் அம்பிகையை சரணமடைகிறேன்.

இதைப்பற்றி வராஹபுராணத்தில் விஸ்தரிக்கப்பட்டிருக்கிறது. ஒரு சமயம் வேத்ராஸுரன் என்பவன் தேவர்களை பயமுறுத்தினன். தேவர்கள் பிரும்மாவை சரணமடைந்தார்கள். பிரும்மதேவன் அப்பொழுது கங்கையில் மூழ்கி தவம் செய்துவந்தார். காப்பாற்றுங்கள், காப்பாற்றுங்கள் என்று சப்தம் கேட்டது. அதைப் பற்றி ஆலோசிக்கும்பொழுது அவரிடமிருந்து ஆயுதங்களுடன் எட்டு புஜங்களுள்ள தேவி ஸிஹ்மத்தின் மீது தோன்றினள். உடனே ஜலத்திலிருந்து வெளியில் வந்து வேத்ராஸுரனை ஸம்ஹரித்தாள். அப்பொழுது பரமசிவன் அவளை துதித்தார். இந்த ஸ்தோத்ரத்தை ஜபிப்பவர்கள் தேவீப்ரஸாதத்தையடைகிறார்களென்று பிரும்மதேவன் சொன்னர். நவமியன்று மாவை ஆஹாரம் செய்து பூஜிப்பவர்கள் ஸ்த்ரீயானலும் புருஷனனலும் மனேபீஷ்டத்தையடைகிறார்களென்று சொல்லப்படுகிறது.

ஹரிவம்சத்திலும் விஷ்ணுதேவியை துதித்தபிறகு என்னுடைய மஹிமையையறிந்தவர்கள் இந்தஸ்தோத்ரத்தை ஜபிப்பார்களோ நமஸ்கரிப்பார்களோ அவர்களுக்கு அடையமுடியாததொன்றுமில்லை என்றார். அநிருத்தன் தேவியை துதித்தபிறகு பிரும்மா விஷ்ணு இந்திரன் சந்திரன் ஸூர்யன் அக்னி வாயு அச்விநீ தேவர்கள் வஸுக்கள் பூமி திக்தேவதைகள் நக்ஷத்ரங்கள் பகன் நவக்ருஹங்கள் நதிகள் சமுத்ரங்கள் புண்ய தீர்த்தங்கள் கந்தர்வர்கள் ஸித்தர்கள் அப்ரஸ்கள் எல்லா தேவர்கள் தேவியின் நாமோச்சாரணத்தினல் திருப்தியடைகிறார்கள். இதன் கருத்து இங்கு கூறப்பட்டுள்ளது.

कान्तारमध्यदृढलग्नतयाऽवसन्ना
मग्नाश्च वारिधिजले रिपुभिश्च रुद्धाः ।
यस्याः प्रपद्य चरणौ विपदस्तरन्ति
सा मे सदाऽस्तु हृदि सर्वजगत्सवित्री ॥ १२ ॥

12. காந்தாரமத்யத்ருடலக்நதயாவஸந்நா
மக்நாஸ்ச வாரிதிஜலே ரிபுபிஸ்ச ருத்தா: ।
யஸ்யா: ப்ரபத்ய சரணௌ விபதஸ்தரந்தி
ஸா மே ஸதாஸ்து ஹ்ருதி ஸர்வஜகத்ஸவித்ரீ ॥

காட்டின் நடுவில் அகப்பட்டுக்கொண்டு வழிதெரியாமல் தபிக்கின்றவர்களும், ஸமுத்ர ஜலத்தில் மூழ்கி வெளிவர முடியாமல் திணருபவர்களும், எதிரிகளால் ஆக்ரமிக்கபபட்டவர்களும், அம்பிகையின் பாதங்களை சரணமடைந்து அந்த ஆபத்துக்களிலிருந்து விடுபடுகிறார்கள். அந்த உலகத்தைப் படைத்த தேவீ எப்பொழுதும் என் மனதில் இருக்கவேண்டும்.

ஹரிவம்சத்தில் தேவியைக் குறித்து ஸ்ரீ பகவான் உன் அருளால் கீழ்கண்ட ஆபத்துக்கள் நீங்கவேண்டுமென்று கூறியதை இங்கு காண்பிக்கின்றார்கள்.

बन्धे वधे महति मृत्युभये प्रसक्ते
वित्तक्षये च विविधे च महोपतापे ।
यत्पादपूजनमिह प्रतिकारमाहु-
स्सा मे समस्तजननी शरणं भवानी ॥ १३ ॥

13. பந்தே வதே மஹதி ம்ருத்யுபயே ப்ரஸக்தே
வித்தக்ஷயேச விவிதேச மஹோபதாபே ।
யத்பாதபூஜநமிஹ ப்ரதிகாரமாஹு:
ஸா மே ஸமஸ்தஜநநீ சரணம் பவானீ ॥

காராக்ருஹபந்தம், வதம், மரணபயம், தனநாசம், பலவிதமான ராஜபயம், சோர, ஸர்ப, வ்யாக்ரபயம் முதலியதுகளில் தேவியைப் பூஜிப்பது பயத்தை நீக்கும். அந்த உலக் மாதாவான பார்வதீ எனக்கு சரணம்.

ஹரிவம்சத்தில் பகவானுடைய வாக்யங்களாலும், வராஹ புராணத்தில் மஹிஷாஸுரவதத்திற்குப் பிறகு பிரும்மாதி தேவர்களின் ஸ்தோத்திரத்திலும் கீழ் கண்டபடி தேவியின் ப்ரஸாதத்தினால் ஸமஸ்த பயமும் நீங்குகிறதென்று தெரிகிறது.

बाणासुरप्रहितपन्नगबन्धमोक्ष-
स्तद्बाहुदर्पदळनादुषया च योगः ।
प्राद्युम्निना द्रुतमलभ्यत यत्प्रसादा-
त्सा मे शिवा सकलमप्यशुभं क्षिणोतु ॥ १४ ॥

14. பாணாஸுரப்ரஹிதபந்நக பந்தமோக்ஷஸ்
தத்³பா³ஹுத³ர்பத³ளநாது³ஷயா ச யோக³: ।
ப்ராத்³யும்நிநா த்³ருதமலப்⁴யத யத்ப்ரஸாதா³த்
ஸா மே சிவா ஸகலமப்யசுபம் க்ஷிணோது ॥

ப்ரத்யும்னனின் குமாரனான அநிருத்தன் பாணாஸுரன் ப்ரயோகம் செய்து விடப்பட்ட நாகாஸ்த்ரபந்தத்திலிருந்து தேவியின் கையினால் அவிழ்த்து விடப்பட்டு அஸ்த்ர மோக்ஷத்தையடைந்து உஷையின் ஸம்பந்தத்தையும் எந்த தேவியின் ப்ரஸாதத்தினால் அடைந்தானோ அந்த மங்கள ரூபியான பரதேவதை ஸமஸ்த அமங்களங்களையும் போக்கவேண்டும்.

இந்த சரித்ரம் ஹரிவம்சத்திலுள்ளது. பாணாஸுரன் ஒரு சமயம் அனிருத்தனை நாகாஸ்திரத்தினால் கட்டினான். இந்த விஷயத்தைத் தெரிவிக்க நாரதர் ஸ்ரீக்ருஷ்ண

பகவானிடம் சென்றார். அப்பொழுது அனிருத்தன் உஷையை ஸமாதானம் செய்துவிட்டு ஸ்ரீ பகவான் சீக்ரம் வந்து அஸ்த்ரத்தை அவிழ்த்துவிடவேண்டுமென்று தேவியைப்ரார்த்தித்தான். ஸ்ரீ கிருஷ்ணன் வந்தே நாக பாசத்தை அவிழ்த்து விடவேண்டுமென்று தேவமரியாதை. அதை மீறாமல் தேவி ஆவிர்ப்பவித்து நாக பாசத்தை தன் கையினால் அவிழ்த்துத் தளர்த்தி அனிருத்தனை ஸமாதானம் செய்கிறாள். பிறகு தேவியின் தூண்டுதலால் சீக்ரம் பகவான் வந்து நாகபாசத்திலிருந்து விடுவித்து பாணாஸுரனையும் நிக்ரஹம் செய்து ஊருக்கு அழைத்துச் செல்லுகிறார். அங்கு அனிருத்தன் உஷையோடு ஸுகமாக வசித்துவந்தான்.

पापः पुलस्त्यतनयः पुनरुत्थितो मा-
मद्यापि हर्तुमयमागत इत्युदीतम् ।
यत्सेवनेन भयमिन्दिरयाऽवधूतं
तामादिदेवतरुणीं शरणं गतोऽस्मि ॥ १५ ॥

15. பாப꞉ புலஸ்த்யதநய꞉ புநருத்யிதோ மா
மத்யாபி ஹர்துமயமாகத இத்யுதீதம் ।
யத்ஸேவனேன பயமிந்திரயாவதூதம்
தாமாதிதேவதருணீம் சரணம்கதோஸ்மி ॥

லக்ஷ்மிதேவியின் அவதாரமாகிய ருக்மிணீ விவாஹ சமயத்தில் தன்னை மணப்பதற்காக சிசுபாலன் வந்ததைக் கேட்டு புலஸ்த்ய புத்ரனான ராவணன்தான் மறுபடியும் என்னை அபஹரிக்க வந்துவிட்டான் என்ற பயத்தை எந்த தேவியை ஸேவித்துப் போக்கிக்கொண்டாளோ அந்த பரமசிவனின் பத்நியான பரதேவதையை சரணமடைகிறேன்.

ஸ்ரீமத் பாகவதத்திலுள்ள சரித்ரம்: ஸ்ரீ ருக்மிணீ தேவீ தன்னை விவாஹம் செய்துகொள்ளவேண்டி ஒரு பிராமணனிடம் ஸ்ரீ க்ருஷ்ணபகவானுக்குத் தெரிவித்தாள். சென்ற பிராமணன் முதல்நாள் இரவு வரையில் திரும்பிவரவில்லை ருக்மிணிக்குக் கவலையதிகரித்தது. பிராமணனும் வந்தார். பகவான் வருவதாகவும் சொன்னார். ஆனாலும் சிசுபாலனின் பயம் போகவில்லை. விவாஹமாவதற்கு முந்தி அந்தப் பெண் அம்பிகையை தர்சனம் செய்வது அந்த குலத்தின் பழக்கம். அவ்விதம் தர்சனம்செய்து பிரார்த்திக்கும்பொழுது முன் ஜன்மாவில் தன்னை ஹிம்ஸித்த ராவணன் மறுபடியும் சிசுபால உருவத்துடன் வந்திருக்கிறான், அவனைப் போக்கடித்து ஸ்ரீ பகவான் என்னை அழைத்துச்செல்லவேண்டுமென்று வேண்டினாள். அவ்விதம் பயம் நீங்கி பகவான் அழைத்துச்சென்றார்.

இங்கு தன் ஸந்தானத்துடன் கூடிய பவானியை நமஸ்கரிக்கின்றேனென்றிருப்பதால் பார்வதியைச் குறிப்பிடுகிறது. க்ரியாசக்தி ப்ரதானமான துர்கையை அல்ல. ஆனாலும் உண்மையில் இருவரும் ஒன்றானபடியால் பொருந்தும்.

यद्ध्यानजं सुखमवाप्यमनन्तपुण्यै-
स्साक्षात्तमच्युतपरिग्रहमाश्ववापुः ।
गोपाङ्गनाः किल यदर्चनपुण्यमात्रा-
त्सा मे सदा भगवती भवतु प्रसन्ना ॥ १६ ॥

16. யத்³த்⁴யாநஜம் ஸுக²மவாப்யமநந்தபுண்யை:
ஸாக்ஷாத்தமச்யுதபரிக்³ரஹமாச்வவாபு: ।
கோ³பாங்க³நா: கில யத³ர்சநபுண்யமாத்ராத்
ஸா மே ஸதா³ ப⁴க³வதீ ப⁴வது ப்ரஸந்நா ॥

பகவானை த்யானம் செய்தால் பகவானின் தோற்றம் மனதில் ஏற்படும். அப்பொழுது அளவற்ற சந்தோஷமுண்டாகும். இது அனேக ஜன்மாவின் புண்யங்களிருந்தால்தான் உண்டாகும். கோபஸ்த்ரீகளோ அந்த பகவானை நேரில் கண்டு ஆலிங்கனாதிகளால் பேரானந்தத்தையடைந்தார்கள். இவ்விதமடைவதற்கு மார்கழிமாதம் காத்யாயனியை அர்ச்சனை செய்ததுதான் காரணமாகும். ஆதலால் அம்பிகையை அர்ச்சனை செய்வது பகவானை நேரில் பார்க்கக்காரணமாகிறது. அப்பேர்பட்ட பரதேவதை எப்பொழுதும் அருள்புரியவேண்டும்.

ஸ்ரீமத்பாகவதத்தில் பகவானுடைய வேணுகானத்தைக் கேட்டு சில கோபிகள் ஸமீபத்திற்குச் சென்றார்கள். சிலர் நிர்பந்தத்தினால் போகமுடியாமல் பகவானை த்யானம் செய்தார்கள். நேரில் போய் பார்க்கமுடியவில்லையே என்று மிகவும் வருந்தினார்கள். அந்த துக்கானுபவத்தால் முன்செய்த பாபங்கள் தொலைந்தன. த்யானத்தினாலுண்டான மானஸிகாலிங்கன ஸுகத்தையனுபவித்ததால் முன் செய்த புண்யங்களும் தீர்ந்தன. இவ்விதம் புண்ய பாபமற்றவர்களாக ஆகி இந்த பௌதிக உடலைவிட்டு பகவானுடைய திருவடிகளையடைந்தார்கள். दुस्सहप्रेष्ठविरहतीव्रतापधुताशुभाः । ध्यान-प्राप्ताच्युताश्लेषनिर्वृत्या क्षीणमंगलाः ॥ तमेव परमात्मानं जार-बुद्ध्यापि सङ्गताः । जहुर्गुणमयं देहं सद्यः प्रक्षीणकल्मषाः ॥ என்று சொல்லப்பட்டிருக்கிறது.

கோபகன்னிகைகளோ வென்றால் ஹேமந்தருதுவின் முதல் மாதமாகிய மார்கழி மாதத்தில் விடியற் காலையில் எழுந்திருந்து யமுனை நதிக்குச்சென்று ஸ்நானம் செய்து மணல் திட்டில் தேவியை பூஜைசெய்து ப்ரார்த்தித்தார்கள். காத்யாயனி மஹாமாயே பவானி புவனேச்வரி, நந்த

கோபகுமாரனை ஸ்ரீ க்ருஷ்ணனை பதியாகச் செய்ய வேண்டும் என்று. இவ்விதம் ஒரு மாதம் வ்ரதம் பூர்த்தியானவுடன் பகவான் நேரில் தோன்றி அவர்களுடைய மனோரதத்தைப் பூர்த்திசெய்தார். இவ்விதம் தேவியின் தர்சனமஹிமையால் பகவானை நேரில் பார்த்து அவருடன் விஹாரம் செய்ய பாக்யம் ஏற்பட்டது.

रात्रिं प्रपद्यइति मन्त्रविदः प्रपन्ना-
नुद्बोध्य मृत्यवधिमन्यफलैः प्रलोभ्य ।
बुध्वा च तद्विमुखतां प्रतनं नयन्ती-
माकाशमादिजननीं जगतां भजे ताम् ॥ १७ ॥

17. ராத்ரிம்ப்ரபத்³யஇதிமந்த்ரவித³:ப்ரபந்நா
நுத்³பொ⁴த்⁴ய ம்ருத்யவதி⁴மன்யப²லை:
ப்ரலோப்⁴ய ।
பு³த்⁴வாவ தத்³விமுக²தாம் ப்ரதநந்நயந்தீ
மாகாசமாதி³ஜநநீம் ஜக³தாம்ப⁴ஜே தாம் ||

'ராத்ரிம் ப்ரபத்யே' என்ற மந்திரத்தையறிந்து சரணமடைந்தவர்களை பேரானுமோக்ஷத்தைத்தவிர மற்ற பயன்களைக் கொடுத்து ஏமாற்றும்பொழுது அவர்கள் அதற்கு மயங்காமல் மோக்ஷத்தையே விரும்பும்பொழுது அவ்விதமே மோக்ஷத்தையடைவிக்கின்ற, உலகத்திற்கு ஆதிமாதாவான அம்பிகையை பஜனம் செய்கின்றேன்.

துர்காதேவியின் உபாஸனத்தினால் மோக்ஷம் கிடைக்குமென்று சாமவேதத்திலுள்ள ஸாமவிதான ப்ராஹ்மணத்தில் சொல்லப்பட்டிருப்பதை இங்கு ஸங்க்ரஹிக்கின்றார். ஸாமவிதான ப்ராஹ்மணத்தில் **अथ यः कामयेत पुनर्नप्रत्याजायेयमिति रात्रिं प्रपद्ये पुनर्भूम्मयो भूकन्यां शिखण्डिनीं पाशहस्तां युवतिं कुमारिणीम्।** என்று ஆரம்பித்து

ஒரு உபாஸனம் விதிக்கிறது. மறுபடியும் பிறக்க வேண்டாமென்று நினைப்பவன் இரவு வேளையில் உபாஸனம் செய்யவேண்டும். துஷ்ட ஸம்ஹாரம் செய்வதற்காக அடிக்கடி அவதரிப்பவளும், ப்ராணிகளுக்கு ஸுகத்தைக் கொடுப்பவளும் நல்ல காந்தியுடன் கூடியவளும், கேச பாசத்தையுடையவளும், பாசத்தை வைத்திருப்பவளும் கன்னிகையுமான ராத்ரிதேவதையை சரணமடைகிறேன். அவள் ப்ரஸாதத்தினுல் ஸூர்யன் பார்க்கும் சக்தியையும் வாயு ப்ராண சக்தியையும் ஸோமன் வாஸனையையும் ஜல தேவதைகள் உடலிற்கு ம்ருதுத்தன்மையையும் ப்ருதிவீ நல்ல சரீரத்தையும் கொடுக்கவேண்டும். மனம் நல்லறிவுள்ளதாக இருக்கட்டும் என்று ஊபாஸனம் செய்பவனுக்கு தேவி எதிரில் தோன்றி நீ இன்ன வருஷம் மாதம் தேதி தினம் காலம் ஸமயம் இதில் மரிக்கப் போகிருய். ஸ்வர்க்கம், ப்ரும்மலோகம், இஷ்டப்பட்ட லோகத்திற்குச் செல், அல்லது உத்தம ஜன்மமான ப்ராஹ்மண்யத்தை அடை என்று சொல்வாள். அதற்கு உபாஸகன் நான் மறுபிறப்பையடையமாட்டேன்; மோக்ஷத்தைக் கொடு என்று பிரார்த்திக்கவேண்டும். அவ்விதம் மோக்ஷத்தை யடைவிக்கிருள். இதற்கு ராத்ரிவிரதம் என்று பெயர். ராத்ரியில் செய்யப்படுவதாலும், அல்லது உபாஸ்ய தேவதைக்கு ராத்ரி என்று பெயர் இருப்பதாலும் அந்தப் பெயர் பொருந்தும். கன்யாம் குமாரிணீம் பாசஹஸ்தாம் என்றிருப்பதால் துர்க்கையின் உபாஸனம் என்று தெரிகிறது.

देशकालेषु दुष्टेषु दुर्गाचन्द्रकलास्तुतिः ।

सन्ध्ययोरनुसन्धेया सर्वापद्विनिवृत्तये ॥ १८ ॥

18. தேசகாலேஷு ஒுஷ்டேஷு துர்கா வந்த்ரகலா
ஸ்துதி:

ஸந்த்யயோரநுஸந்யேயா ஸர்வாபத்விநிவ்ருத்த
யே ||

தேச காலங்கள் கெட்டிருக்கும்பொழுது தேவியின் சந்திர கலாஸ்துதி என்ற இந்த ஸ்தோத்ரம் காலை மாலை இருவேளைகளிலும் ஆபத்துக்கள் நீங்குவதற்காக அவச்யம் ஜபம் செய்யப்படவேண்டும்.

॥ इति दुर्गाचन्द्रकलास्तुतिः समाप्ता ॥

துர்காசந்திரகலாஸ்துதி முற்றிற்று.

ஓம் தத்ஸத்.

Thompson & Co., Ltd., Madras.